# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.128/2022

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : பாப்பாத்தி | Father's/Husband's Name : | கனகராஜ் |
| Village | : கடமலைக்குண்டு | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** என்னை நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வழக்கறிஞர் அழைத்து வந்தார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். வாதி எனது மருமகள். வாதியின் கணவரும், 1, 2 பிரதிவாதிகளும் எனது மகன்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தை வாதிக்கு நான் தான் எழுதி கொடுத்தேன். தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். எனக்கு எழுத படிக்கத் தெரியாது. வழக்கில் நான் தனிப்பட்ட முறையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெயரில் ஏற்பட்ட வா.சா.ஆ.1 பட்டாவின் அடிப்படையில் தான் வாதிக்கு வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.1 பட்டாவில் 28.06.2022 ம் தேதியன்று தான் வட்டாட்சியர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர்த்து தாவா சொத்து என் பெயரில் இருந்தது என்பதை காட்ட வேறு ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. பட்டாவில் குறிப்பிட்டுள்ள அளவுகள் அடிப்படையில் தான் வாதிக்கு கிரையம் கொடுத்திருக்கிறேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணமே 28.06.2022 ம் தேதி தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் அதற்கு முன்பு தாவா சொத்து என் பெயரில் இருந்ததற்கு எந்த ஆவணமும் இல்லாமல் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலமும், வாதி தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலமும் ஒன்றாக உள்ளது என்றால் சரிதான்.

எனக்கு வழக்கு விபரங்களே தெரியாது என்றாலும் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) 1, 2 பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் அவருக்கு ஆதரவாக பிரதிவாதிகளின் அனுபவத்தை மறைத்து நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் தான் இருக்கிறது என்றாலும் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தின் மேற்கு மற்றும் கிழக்கு பக்கத்தில் இருந்து கொண்டு வாதிக்கு தாவா சொத்தில் இடைஞ்சல் செய்கிறார்கள் என்று பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து மொத்தமும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு பாத்தியமில்லாத சொத்திற்கு தான் என் பெயரில் பட்டா வாங்கி அதன் அடிப்படையில் வாதி பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல.

4) மேற்படி மோசடியாக பெற்ற பட்டாவின் அடிப்படையில் நான் வாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் மோசடியானது என்றாலும் அதன் அடிப்படையில் வாதிக்கு கொடுத்துள்ள பட்டாவும் மோசடியானது என்றால் சரியல்ல. வாதி எந்த காலத்திலும் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை அளவீடு செய்த விபரம் எனக்கு தெரியும். அதன் பிறகு நில அளவையர் தாவா சொத்தின் கிழமேல் அளவு தென்வடல் அளவாகவும், அதேபோல் தென்வடல் அளவு கிழமேல் அளவையும் மாற்றி கொடுத்திருப்பதாக நில அளவையர் அறிக்கை கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நில அளவையர் அறிக்கை வைத்து பார்த்தால் எனக்குகொடுத்துள்ள பட்டாவின் அளவுகளும், கிரையப் பத்திரத்தில் உள்ள அளவுகளுக்கும் மாறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

5) நான் சொல்வது போல் தாவா சொத்தின் அனுபவத்தில் நான் இருந்திருந்தால் தாவா சொத்தின் அளவுகளை சரியாக கொடுத்திருப்பேன் என்றாலும் நா'ன் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் அளவுகள்

தெரியவில்லை என்றாலும் சரியல்ல. வாதிக்கு நான் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் சரியான அளவுகள் குறிப்பிடாததால் அந்த கிரைய பத்திரத்தின் அடிப்படையில் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக எனதுநிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 09.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.02.09 11:47:34 +0530

District Munsif,
Aundipatti.